வேலூர் மாவட்டத்தில் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகை!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!



வேலூர், நவ.3-

வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் அறிக்கை வருமாறு:

இன்று (03.11.2025 - திங்கட்கிழமை) அன்று மாலை 4.00 மணிக்கு காட்பாடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கிளைக்கழக செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் ஆகியோர்கள் ஆலோசனை கூட்டம் சேவூரில் அமைந்துள்ள A.S.குருசாமி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் கிளைகழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் எவ்வாறு தேர்தல் பணிகள் மேற்கொள்ள வேண்டும், என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற அரை கூவலுடன் தேர்தல் களம் காண்பதற்கு வியூகங்களை தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வகுத்து கொடுக்கும் செயல்திட்டங்களின் அடிப்படையில் களப்பணி ஆற்றிட தேவையான யுக்திகளை நேரில் கலந்துகொண்டு தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தக்க ஆலோசனைகளை வழங்க உள்ளார்.

இக்கூட்டத்தில் கழக பொதுச்செயலாளர், அமைச்சர் துரைமுருகன், கழக வடக்கு மண்டல பொறுப்பாளர், அமைச்சர் எ.வ.வேலு, மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி, ப.கார்த்தி கேயன் எம்.எல்.ஏ, அமலுவிஜயன் எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

எனவே காட்பாடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் மற்றும் கிளைக்கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் ஆகியோர்கள் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இதே போன்று நாளை (04.11.2025-ளளசெவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு கோட்டை வெளி மைதானத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்டு பகல் 12.00 மணிக்கு வேலூர் ஸ்ரீபுரம், ஸ்ரீ நாராயணி மஹாலில் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கிளைக்கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டத் தில் கலந்துகொண்டு துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தக்க ஆலோசனைகளையும், வழி முறைகளையும் வழங்க உள்ளார்.

இக்கூட்டத்தில் கழக பொதுச்செயலாளர், அமைச்சர் துரைமுருகன், கழக வடக்கு மண்டல பொறுப்பாளர், அமைச்சர் எ.வ. வேலு, மாவட்ட செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ, டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி, ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, அமலுவிஜயன் எம்.எல்.ஏ. ஆகியோர்கள் கலந்து கொள்கிறார்கள்.

எனவே அணைக்கட்டு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் மற்றும் கிளைக்கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் ஆகியோர்கள் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு மாவட்ட செயலாளரும், சட்டபேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் சட்டமன்ற தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், சின்ன தோட்டாளம் ஊராட்சியில் மாவட்ட ஆட்சி தலைவர் சிவாசௌந்தர வள்ளி தலைமையில் நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர், கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர் டி.எம்.கதிர் ஆனந்த் பொதுமக்களிடம் இருந்து குறைகளை கேட்டறிந்து அதற்கு உண்டான தீர்வுகள் உடனடியாக காண வேண்டுமென அரசு துறை அதிகாரிகளிடத்தில் அறிவுறுத்தினார். முன்னதாக, 2024–2025 சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.19.45 இலட்சம் மதிப்பீட்டில் OHT தொட்டி திறந்து வைக்கக்பட்டது. கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வ நாதன், மாதனூர் ஒன்றியக் குழு தலைவர் சுரேஷ், ஒன்றிய கழக, கிளை கழக செயலாளர்கள், அரசுத்துறை அதிகாரிகள், ஊராட்சி மன்ற தலைவர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.





